செ.வெ.எண். 63/ஜூன் செய்தி வெளியீடு தேதி : 29.06.2016

**தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், கெண்டேனஅள்ளி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் ரூ. 48 இலட்சத்து 55 ஆயிரத்து 462/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**





தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், மாரண்டஅள்ளி உள்வட்டம், கெண்டேனஅள்ளி கிராமத்தில் இன்று (29.06.2016) மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்முகாமில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் திருமண உதவித் தொகை 17 பயனாளிகளுக்கு ரூ. 1 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் காசோலைகளையும், இயற்கை மரண உதவித்தொகை 51 பயனாளிகளுக்கு ரூ. 6 இலட்சத்து 37 ஆயிரத்து 500 மதிப்பில் காசோலைகளையும், 32 பயனாளிகளுக்கு முதியோர் உதவி தொகை மாதந்தோறும் ரூ. 1000/- பெறுவதற்கான உத்தரவுகளையும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு சொட்டு நீர் பாசனக்கருவியும், 1 பயனாளிக்கு மா அடர் நடுவினையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகளையும், 2 பயனாளிகளுக்கு சாமை செயல் விளக்க திடல்களையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 6 பயனாளிகளுக்கு தலா ரூ. 4 ஆயிரத்து 549 மதிப்பில் சலவைப்பெட்டிகளையும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ஊறுகாய் புல் தயாரித்தல் (சைலேஜ் பேக்), 3 பயனாளிகளுக்கு சோளம் மல்டி கட்டுகளையும் ஆக மொத்தம் ரூ. 48 இலட்சத்து 55 ஆயிரத்து 462/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 119 பயனாளிகளுக்கு வழங்கி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது :-

தருமபுரி மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் கிராமங்களைத் தேர்வு செய்து மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்று வருகிறது. இம்முகாமில் தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், சமூக நலத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை போன்ற துறைகளின் மூலம் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இது மிகவும் பயனள்ளதாக அமையும். கெண்டேனஅள்ளி கிராமத்தை பாராளுமன்ற உறுப்பினர் மூலம் தேர்வு செய்யப்பட்டு பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசின் அனைத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து நடத்தும் முகாம்களில் பொதுமக்கள் தங்களது கோரிக்கைகள் குறித்து மனுக்கள் அளித்து வருகின்றனர். குறிப்பாக முதியோர் உதவித்தொகை வழங்க வேண்டி அதிக மனுக்கள் அளிக்கப்படுகிறது. நமது மாவட்டத்தில் 64 ஆயிரம் பேரும் முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் நடைபெற்ற ஜமாபந்தி நிகழ்ச்சியில் 4000 மனுக்கள் பெற்று அவற்றை கணினி மூலம் பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அதிக உறுப்பினர்களை சேர்க்க வேண்டுமென்ற நோக்கில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அம்மா திட்ட முகாம் மூலம் 470 வருவாய் கிராமங்களில் 3 சுற்று முடிவுற்று 4-வது முறையாக

மனுக்களை பெற்று நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம். அம்மா திட்ட முகாம்கள் மூலம் 1 இலட்சத்து 10 ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டு 80 ஆயிரம் மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது. மீதமுள்ள மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொண்டு குறுகிய காலத்திற்குள் அதற்கான பலன்கள் கிடைக்க வழி செய்யப்படும். புதிய குடும்ப அட்டை கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு குடும்ப அட்டை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. குறுகிய காலத்திற்குள் 3500 குடும்ப அட்டை வழங்கியுள்ளோம். மீதமுள்ள புதிய குடும்ப அட்டைகளை விரைந்து வழங்குவதற்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் செய்து வருகிறது.

ஒகேனக்கல் குடிநீர் அனைத்து பகுதி மக்களுக்கும் தங்கு தடையின்றி கிடைக்க வழிவகை செய்வதற்கு ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தேசிய ஊரக குடிநீர் மற்றும் சுகாதார சிறப்பு கிராம சபைக்கூட்டம் 30.06.2016 அன்று நடைபெறவுள்ளது. அதில் கிராமங்களுக்கு வழங்கப்படும் குடிநீர் பாதுகாப்பானதா என்பதை கண்டறிய களநீர் பரிசோதனை பெட்டி அனைத்து ஊராட்சிகளுக்கும் வழங்கப்படுகிறது. அதன் மூலம் அனைத்து ஊராட்சிகளிலும் நீர் மாற்றிகள் சேகரிக்கப்பட்டு பள்ளி ஆசிரியர்களால் பரிசோதனை செய்யப்படுகிறது. தனிநபர் கழிப்பறை அமைப்பதற்கு அரசு ரூ. 12,000/- வழங்குகிறது. அதனை பெற்று அனைவரும் கட்டாயம் கழிப்பறை அமைக்க முன்வர வேண்டும். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் அதிநவீன மின்னணு விளம்பர வாகனத்தின் மூலம் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்து வீடியோ செய்தி மலர் ஒளிபரப்பு செய்யப்பட்டதை மாவட்ட ஆட்சித் தலைவர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

இம்முகாமில் மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு. தொ.மு. நாகராசன், கெண்டேனஅள்ளி ஊராட்சிமன்ற தலைவர் திரு. ஜெ. மணிவண்ணன் சிறப்பு திட்ட செயலாக்கம் தனி துணை ஆட்சியர் திரு. குப்புசாமி, தருமபுரி கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி. சுசீலா, திட்ட அலுவலர் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம் திருமதி. பத்மாசனி, ஆதிதிராவிட நல அலுவலர் திருமதி. இலாஹிஜான், நில அளவை உதவி இயக்குநர் திரு. மனோகரன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.ரேவதி, தோட்டக்கலை துணை இயக்குநர் திரு.அண்ணாமலை, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. பிச்சைராமன், தனி துணை ஆட்சியர்கள் செல்வி வள்ளி (ச.பா.தி), ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திருமதி. இலாஹிஜான், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு. அமீர்பாஷா, மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. மகிழ்நன், பாலக்கோடு வட்டாட்சியர் திரு. சரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. ராமஜெயம், திரு. செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.